GODDependence
True freedom is being dependent on God
செய்தி மடல்
மே 2025



## எழும்பிப் பிரகாசி

ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். (எபேசியர் 5:14)

அநேக கிறிஸ்தவர்கள் "எழும்பிப் பிரகாசி" என்பதை ஒரு வாக்குத்தத்தமாக எடுத்துக்கொள்கின்றனர். ஒரு வேலைக்கு சேர விண்ணப்பிக்கும்போது, பரீட்சை எழுதி தேர்வு முடிவுக்காக காத்திருக்கும்போது, ஒரு புதிய காரியத்தை செய்யத் துவங்கும்போது, "எழும்பிப் பிரகாசி" என்று கிறிஸ்தவர்கள் வாழ்த்துகிறதை நீங்கள் கேட்க, பார்த்திருக்கக்கூடும். நாம் அனைவருமே இப்படிப்பட்ட நேர்மறையான ஊக்கப்படுத்துகிற அகத்தூண்டுதலை உண்டுபண்ணுகிற வார்த்தைகளை திருமறையான பரிசுத்த வேதாகமத்தில் இருந்து கேட்க விரும்புகிறோம். ஆனால் இந்த வசனங்கள் முதன் முதலில் யாருக்காக எழுதப்பட்டன? விசுவாசிக்கா அல்லது அவிசுவாசிக்கா? ஆவிக்குரியப் பிரகாரமாக தூங்குகிற பரிசுத்தவானுக்கா அல்லது ஆவிக்குரியப் பிரகாரமாக மரித்த நிலையில் இருக்கிற பாவிக்கா?

தேவபக்தியற்றவர்களுக்காகவே இவ்வசனம் எழுதப்பட்டது என்று அனேகர் விளக்கம் கூறுகின்றனர். எனினும், தேவபக்தியுள்ள மற்றும் தேவபக்தியற்ற அனைவருக்குமே கிறிஸ்துவின் ஒளி தேவை. "தேவனைப் பிரியமாக பின்பற்றுகிற பிள்ளைகள்," "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என எபேசு சபை விசுவாசிகளை பவுல் இவ்வதிகாரத்தில் குறிப்பிட்டாலும், அவர்கள் இந்த விழித்தெழுவதற்கான அழைப்பை கேட்க வேண்டிய நிலை இருந்தது. ஏன் என நீங்கள் கேட்கக்கூடும். இருளில் வீழ்ந்து பின்வாங்கிப் போவதற்கான அபாயம் நம் வாழ்வில் எப்பொழுதும் காணப்படுகிறது. நாம் ஒரு காலத்தில் இருளில் இருந்தோம். ஆனால், நம் கிறிஸ்தவ வாழ்வில் இருள் மற்றும் அந்தகாரத்திற்கு எவ்வித இடமும் இல்லை. ஆகவே நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் அல்லது விழித்தெழ வேண்டும்.

காலைப் பொழுதில் ஒருவர் நம்மைப் பார்த்து "விழித்தெழு"என்று சொல்வதற்கும் வரப்போகிற ஆபத்தைக் குறித்துச் சொல்லி அவசரமாக ஒருவர் நம்மை தட்டி எழுப்பி, "விழித்தெழு" என்று சொல்வதற்கும் பெரும் வித்தியாசம் உண்டு.

இங்கே, விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய சோம்பல் மற்றும் தூக்கத்தில் இருந்து விழுத்தெழ வேண்டும் என பவுல் எச்சரிக்கிறார். "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு." இது கேட்கிறவர்கள் இப்பொழுதே உடனே செய்வதற்கான ஒரு கட்டளை அழைப்பு ஆகும். தாமதம் செய்யாதே, என்ற அவசர உணர்வை இது வெளிப்படுத்துகிறது. இதைக் கேட்கிறவர்கள் பாவ இருளில் இருந்து எழும்புவதற்கான அழைப்பு ஆகும். இயேசுவைப் பின்பற்றுகிற ஒருவர் தங்களுடைய முந்தைய பாவ வாழ்வில் வெளிப்படையாகவோ இரகசியமாகவோ தொடர்ந்து வாழக்கூடாது.

நாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியும்போது, அவருடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்கிறோம். அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார். "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்று இயேசு சொன்னார் (யோவான் 8:12).

நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோவான் 1:6-7).

சிலநேரங்களில், தேவனுடைய ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அவருடைய வார்த்தையை விட்டு விலகி பாவ உலகில் வீழ்ந்துவிடுகின்றனர். இது அவர்களுடைய வாழ்வை பயங்கரமான இருளில் தள்ளிவிடுகிறது. எனினும், அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்து தேவனிடம் திரும்புவார்கள் எனில், தேவன் அவர்களுக்கு தம் இரட்சிப்பை அருளுவதாக வாக்குப்பண்ணுகிறார். ஆகவே, "எழும்பிப் பிரகாசி" என்பது வாக்குத்தத்தம் மட்டுமல்ல. இது தேவனுடைய இரட்சிப்பு/விடுதலைக்கு நாம் பதில் சொல்வதற்கான அவருடைய கட்டளை ஆகும். "எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது."

நீங்கள் நித்திரை மயக்கமாக இருக்கிறீர்களா? "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்."

**- சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூர்.**



பரிசுத்த வேதாகமத்தை நாம் வாசித்து தியானிக்கும்போது, இந்த உலகில் தேவனுடைய ஜனங்களுக்கான அவருடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 6 மாதங்களாக இந்த செய்திமடல் தொடர்ச்சியாக மாதந்தோறும் வெளிவரவும் இந்த மாத செய்திமடல் தாமதமானாலும் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கிறிஸ்தவ வட்டாங்களில் நாம் பின்பற்றத்தக்க முன்மாதிரிகள் அருகிவருவதை நாம் கண்கூடாக் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருங்கள் என இயேசுவுக்கு அடுத்தபடியாக தைரியமாகச் சொன்ன நபர் அப்போஸ்தலனாகிய பவுல் மாத்திரமே. ”நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.” என்று அவர் கூறுவதை 1 கொரிந்தியர் 11:1 ல் பார்க்கிறோம். "பவுல் தற்பெருமையிலோ அல்லது அகந்தையிலோ அல்ல, மாறாக தானே கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனாக இருப்பதால் தான் இப்படி கூறுகிறார். இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?"

**கிறிஸ்து – உன்னதமான முன்மாதிரி:** பவுல் தன்னை கிறிஸ்துவோடு இணைத்துக் கொள்கிறார், அதன் மூலம் கிறிஸ்துவே உண்மையாக பின்பற்றத்தக்க தலைவர் மற்றும் முன்மாதிரி என்பதை வெளிப்படுத்துகிறார். உண்மையான ஒரு கிறிஸ்தவ தாக்கம் என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலிருந்தே வெளிப்படும் என்பதற்கு பவுல் ஒரு வல்லமையான முன்மாதிரியை நிலைநாட்டுகிறார்.

**அர்ப்பணம் - மாற்றாக அல்ல:** பவுல் கிறிஸ்துவுக்கு பதிலாக தன்னைப் பின்பற்றுவதை நிலைநிறுத்தவில்லை. மாறாக, கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின் கீழ் தன்னை முற்றிலும் அர்ப்பணித்து, மற்றவர்களையும் அதையே செய்ய ஊக்குவிக்கிறார். உண்மையான ஒரு கிறிஸ்தவ தலைமையின் நோக்கம், மற்றவர்களை தன்னை நோக்கி அல்ல, இயேசுவை நோக்கி வழிநடத்துவதே.

**நிலைத்தன்மையும் பொறுப்புணர்வும்:** பவுல் மற்றவர்களை தன்னைப் பின்பற்றும்படி அழைத்தார், ஏனென்றால் அவர் சொல்வதை தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினார்.

கிறிஸ்தவ தலைவர்கள் பிறர் பின்பற்றக்கூடிய வாழ்க்கையை வாழ வேண்டும், எப்போதும் கிறிஸ்துவின் போதனைகள் மற்றும் குணாதிசயத்தில் வேரூன்றியவர்களாக இருக்க வேண்டும் என்பது பவுலின் உதாரணம் நமக்கு கற்பிக்கும் பாடமாகும். இதற்கு ஒரு கட்டுப்பாடு, தாழ்மை மற்றும் தியாகம் நிறைந்த வாழ்க்கை தேவைப்படுத்துகிறது.

நாம் அனைவரும் பின்பற்ற மற்றும் வழிநடத்த என்னும் இரண்டு விஷயங்களுக்கு அழைக்கப்பட்டுள்ளோம்; இயேசுவை முழுமனதோடு பின்பற்றி, நம் வாழ்க்கை மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். குழப்பமான செய்திகளும் குறைபாடுள்ள முன்மாதிரிகளும் நிறைந்த இந்த உலகில், பவுலைப் போல நாமும் "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைப் போல, நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்!" என தைரியத்தோடும் தாழ்மையோடும் சொல்ல முடியும் வகையில் வாழ நாம் தீர்மானிப்போம்.

மார்ச் 05 இல் ஆரம்பித்து ஏப்ரல் 20 ல் முடிவடைந்த லெந்து கால வேதவாசிப்பு சவாலில் கலந்து கொண்டவர்களில் 82 பேர் பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடித்தனர். இது புதிய அனுபவமாக மிகவும் பிரயோஜனமாக இருந்தாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்த 2 மாதங்களாக நாம் திட்டமிட்டபடி GODependence கருத்தரங்குகள் ஆரம்பித்து நடைபெற்றன. இந்த மே மாதத்தில் அது ஒழுங்கு செய்யப்படவில்லை.

2025-26 ம் கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் (CBRC) 16 ஜூன் 2025 அன்று ஆரம்பிக்க இருக்கின்றன. இந்த வருடத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள ஊழிய நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்காகவும் எவ்வித தடையில்லாமலும் நடைபெற வேண்டுமென்று உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

இந்த GODependence செய்திமடல் குறித்த உங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். GODependence ஊழியங்ளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - மே 2025

**துதிப்போம்:**

1. 2025 ஏப்ரல் மாத வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காக.
2. 2025 மார்ச் மாதத்தில் ஆரம்பித்த லெந்து கால வேதவாசிப்பை 20 ஏப்ரல் 2025 ல் வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காக.
3. NEET தேர்வை நல்ல முறையில் பிள்ளைகள் எழுதி முடித்ததற்காக.
4. 2025 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான GODependence Talk Shows பயனுள்ளதாக இருந்ததற்காக.
5. இம்மட்டும் GODependence ன் ஊழியகாரியங்களை ஆண்டவர் நடத்தி வருகின்ற தயவுக்காக.

**ஜெபிப்போம்:**

1. 2025 மே மாத வேதவாசிப்பு குழுவில் இணைந்து இருக்கும் ஒவ்வொருவருக்காக; அவர்கள் தடைகளையும் தாண்டி தவறாமல் வேதம் வாசிக்க.
2. சரீர பெலவீனத்துடன் இருக்கும் ஒவ்வொருவரும் ஆண்டவரின் சுகத்தைப் பெற்றுக்கொள்ளவும் / குடும்பத்தில் பலவித பிரச்சனைகளுடன் இருக்கின்றவர்கள் சமாதானத்தை பெற்றுக்கொள்ளவும் / தங்களுக்கு அன்பானவர்கர்களை இழந்து இருக்கின்றவர்கள் தேவ ஆறுதலை பெற்றுக்கொள்ளவும்.
3. பிள்ளைகள் விடுமுறை நாட்களில் வேதாகமத்தை வாசிப்பதில் அதிக நேரம் செலவிட.
4. 12 ம் வகுப்பு தேர்வு முடிவினைத் தொடர்ந்து உயர்வகுப்பிற்கு செல்ல தயாராகும் பிள்ளைகள் சரியான படிப்பினை தேர்வு செய்ய மற்றும் அவர்களின் எதிர்காலத்திற்காக.
5. ஜூன் மாதம் வெளிவர இருக்கும் NEET தேர்வு முடிவுக்காக மற்றும் மாணவர்கள் தங்களின் படிப்பு குறித்து சரியான முடிவுகளை எடுக்க.

**பரிசுத்த வேதாகமமானது நம் வீட்டில் இருந்து நமக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் ஆகும். - ஹிப்போவில் வாழ்ந்த அகஸ்டின்**

# நாம் தேவ மனிதர்களைப் பின்பற்றுவதா அல்லது இயேசுவை மட்டுந்தான் பின்பற்ற வேண்டுமா?

சகரியா பூணன், பெங்களூர்.



பழைய உடன்படிக்கையில், தேவனிடமிருந்து மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகப் பெற்றுக் கொண்ட எழுதப்பட்ட வார்த்தைகளை மட்டுமே இஸ்ரவேலர்களால் பின்பற்ற முடிந்தது. அக்காலத்தில் வாழ்ந்தவர்களில் ஒருவராலும் "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியவில்லை. மிகப் பெரும் தேவ மனிதர்களாய்த் திகழ்ந்த மோசே, எலியா மற்றும் யோவான்ஸ்நானன் ஆகியோராலும்கூட அதைச் சொல்ல இயலவில்லை. தேவனுடைய வார்த்தை மட்டுமே அவர்களுடைய பாதைக்கு வெளிச்சமாயிருந்தது (சங் 119:105).

ஆனால் இயேசு வந்து புதிய உடன்படிக்கையைத் திறந்து வைத்தார். அவர் நமக்கு தேவனுடைய வார்த்தையை மாத்திரம் கொடுக்காமல், தம்முடைய சொந்த வாழ்க்கையின் மூலமாக நாம் பின்பற்றக்கூடிய ஒரு முன் மாதிரியையும் நமக்குக் கொடுத்தார். வேதத்தில் **"என்னைப் பின்பற்றுங்கள்"** (மத் 4:19; யோவான் 21:19; லூக் 9:23) என்று சொன்ன முதல் நபர் அவர்தான். ஆதலால் புதிய உடன்படிக்கையில், நமக்கு எழுதப்பட்ட வார்த்தை மற்றும் இயேசுவில் மாம்சமாகிய வார்த்தை ஆகிய இரண்டுமே உண்டு. இதை வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்த எழுதப்பட்ட வார்த்தையானது, நாம் கண்களால் கண்டு, பின்பற்றும்படிக்கு ஒரு மனுஷ வாழ்க்கையின் மூலமாக வெளிப்பட்டது.

பரிசேயர் வெறுமனே வேத வார்த்தைகளை மட்டும் படித்துவிட்டு, தம்மிடத்தில் வராமல் இருந்தபடியால், இயேசு அவர்களைப் பார்த்து, **"வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை"** (யோவான் 5:39,40) என்று கடிந்துகொண்டார்.

இயேசுவின் வாழ்க்கைதான் இன்று நம்முடைய பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது (யோவான் 1:4). எழுதப்பட்ட வார்த்தையல்ல. ஏதாவது சில குறிப்பிட்ட காரியங்களுக்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து வழிகாட்டுதலை நம்மால் பெறமுடியாமல் போகலாம். அச்சமயங்களில், பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் வாழ்க்கையை நம்முடைய இருதயங்களில் வெளிப்படுத்துவார். அதை நாம் உற்று நோக்கினால், நமக்கு ஒரு பதில் கிடைத்துவிடும்.

மேலும், புதிய உடன்படிக்கையிலே, பரிசுத்த ஆவியானவர், பவுலைப் போன்ற ஒரு பக்திமானைக் கொண்டு,**"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைப் போல, என்னைப் பின்பற்றுங்கள்"** என்று சொல்லும்படி ஏவினார். இந்த வார்த்தைகளை **மூன்றுதரம்** சொல்லும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் அவரை ஏவினார். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளிலே நடக்கிற மெய்யான தேவபக்தியுள்ள மனிதர்களை நாம் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதற்காகவே பரிசுத்த ஆவியானவர் அப்படிச் செய்தார் (1கொரி 4:16; 1கொரி 11:1; பிலி 3:17).

ஒரு மெய்யான புதிய உடன்படிக்கை ஊழியனாய் இருப்பவன், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு மட்டுமே தேவனுடைய தரத்தை அறிவிக்காமல், பவுலைப் போலவே, **"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைப் போல, என்னைப் பின்பற்றுங்கள்"** என்று சொல்லியும் அறிவிப்பான்.

"நாம் எந்த மனிதனையும் பின்பற்றக்கூடாது. இயேசுவை மட்டுமே பின்பற்ற வேண்டும்" என்று சிலர் கூறுகின்றனர். இது ஒரு பரிசுத்தமான பதம் போலத்தான் நம்முடைய காதுகளில் தொனிக்கிறது. ஆனால் இது தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் முரணானது. ஏனெனில் நாம் இப்போது கண்டது போல, பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தன்னைப் பின்பற்றும்படியாகச் சொல்லியிருக்கிறாரே.

கொரிந்தியர்களின் ஆவிக்குரிய தகப்பனாக பவுல் இருந்தபடியால், அவர் தன்னைப் பின்பற்றும்படி அவர்களைப் பார்த்துச் சொன்னார். "கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் உங்களுக்கு அநேகர் இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினாலே நான் உங்களைப் பெற்றேன். ஆகையால் என்னைப் பின்பற்றுகிற வர்களாகுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1கொரி 4:15,16). ஒரு வேத போதகனை ஒருவனால் பின்பற்ற முடியாது. ஏனென்றால், அந்த வேத போதகன் வசனத்தை எவ்வளவுதான் துல்லியமாய்ப் போதிக்கிறவனாய் இருந்தாலும், அவனால் தன்னுடைய வாழ்க்கையின் மூலமாய் ஒரு நல்ல முன்மாதிரியை காண்பிக்க முடியாமல் போகலாம். அப்படியானால் இந்த வசனத்தின்படி, ஓர் ஆவிக்குரிய தகப்பன், பத்தாயிரம் வேத போதகர்களைவிட மேலானவன் என்பது புலனாகிறது. எனவே எல்லாக் கிறிஸ்தவர்களுமே, தாங்கள் பின்பற்றும்படிக்கு, பவுலைப் போல ஓர் ஆவிக்குரிய தகப்பனைப் பெற்றிருப்பது சாலச் சிறந்ததாகும். இப்படிப்பட்ட ஆவிக்குரிய தகப்பனைப் பின்பற்றினால், நாம் பாவத்தில் விழுவதிலிருந்தும், கள்ளப் போதகத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவோம்.

தன்னைப் போலவே "கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிற" வேறுசில தேவபக்தியுள்ள மனிதர்களையும் பின்பற்றும்படி பவுல் கிறிஸ்தவர்களை ஏவினார். **"நீங்கள் உங்களுடைய ஜீவியங்களை என்னுடைய முன்மாதிரியைப் போலவே மாற்றி, எங்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றுகிறவர்களிடத்திலிருந்தும் கற்றுக் கொள்ளுங்கள்"** (பிலி 3:17 ) என்று அவர் சொன்னார்.

நம்மை நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றும்படிக்கு வேதம் நமக்குக் கட்டளையிடுகின்றது.

வேதாகம விளக்க உரைகளோ, ஆலோசனை சங்கங்களோ அல்லது விசுவாச பிரமாணங்களோ நம் கிறிஸ்தவ விசுவாசத்தை வடிவமைக்கக் கூடாது. அவை எவ்வளவுதான் பயனுள்ளதாக இருந்தாலும், தேவனுடைய வார்த்தையே நம் விசுவாசத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.
- பிரையன் எட்வர்ட்ஸ்

"உங்களை நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்" (எபி 13:17)."தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து, உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நீங்கள் நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" (எபி 13:7).

நாம் மற்றவர் பெற்றுள்ள ஊழியத்தைப் பின்பற்றும்படி அழைக்கப்படவில்லை. ஏனென்றால் தேவன் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும், பிறர் செய்யமுடியாத, அவர்கள் மட்டுமே செய்யத்தக்க பிரத்யேகமான ஊழியத்தைத் தந்திருக்கிறார். நமது உடம்பிலுள்ள பல்வேறு உறுப்புகளும் பலவிதமான பணிகளை நிறைவேற்றுவதைப் போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும் ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு பணியை நிறைவேற்றுகின்றது. இயேசு ஜனங்களைத் தம்மைப் பின்பற்றுபடி அழைத்த போது, அவர்கள் அவரைப் போல அற்புதங்களை நிகழ்த்த வேண்டுமென்று எதிர்பார்த்தோ அல்லது அவரைப் போல பிரசங்கித்திட வேண்டுமென எதிர்பார்த்தோ அவர்களை அழைக்கவில்லை. அது அவர் பெற்ற ஊழியம். அவரது வாழ்க்கையில் காணப்பட்ட முன்மாதிரியைப் பின்பற்றும்படிக்கே அவர் அவர்களை அழைத்தார். அதாவது அவருடைய வாழ்க்கைக் கோட்பாடுகளின்படியே அவர்களும் வாழ வேண்டுமென அவர் எதிர்பார்த்தார். அதுபோலவே, பவுலும் தான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதைப் போலவே தன்னைப் பின்பற்றும்படி விசுவாசிகளை அழைத்த போது, அவர்கள் எல்லாரும் அவரைப் போலவே அப்போஸ்தலனாக வேண்டும் என்றோ அல்லது வியாதியஸ்தரைக் குணமாக்க வேண்டும் என்றோ எதிர்பார்க்கவில்லை. அவர் எவ்வண்ணம் கிறிஸ்துவின் கோட்பாடுகளின் அடிப்படையில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டாரோ, அது போலவே அவர்களுடைய வாழ்க்கையும் இருக்க வேண்டும் என்றுதான் விரும்பினார்.

மேலே கண்ட வசனங்களெல்லாம், தேவ மனிதர்களின் வாழ்க்கையை நாம் பின்பற்றவேண்டும் என்பதற்காகவே ஆவியானவர் நமக்குக் கட்டளையிட்டவையாகும். பொதுவாக, தேவபக்தியுள்ள மனிதர்களின் முன்மாதிரியைப் பின்பற்ற முடியாத அளவிற்கு பெருமையாய் இருப்பவர்களெல்லாம் முடிவிலே மனுஷீகமானவர்களாய் உருவெடுக்கிறார்கள்; அல்லது தங்களுடைய சுய-ஜீவியத்தினால் வழிநடத்தப்படுகிற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் ஏற்படும் விளைவுகள் யாவும் பேராபத்தைக் கொண்டுவருவனவாக இருக்க முடியும்.

தன்னுடைய முன்மாதிரியையும், தேவபக்தி நிறைந்த பிறருடைய முன்மாதிரியையும் பின்பற்ற வேண்டும் (பிலி 3:17) என்று பிலிப்பிய கிறிஸ்தவர்களுக்குச் சொன்ன பவுல், சிலரது முன்மாதிரிகளைப் பின்பற்றக் கூடாது என்றும் உடனடியாக அவர்களை எச்சரித்தார். "ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய மகிமை இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலி 3:18,19).

அவர்கள் பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றி நடந்திருந்தால், அந்த தேவபக்தியற்ற மனிதரின் வஞ்சனைகளிலிருந்து பாதுக்காக்கப்பட்டிருந்திருப்பார்கள்.

**ஒரு மனிதன் தேவபக்தியுள்ளவனும், நாம் பின்பற்றக்கூடிய தகுதியுடையவனுமாய் இருக்கிறான் என்று அடையாளம் காண்பதற்கான ஏழு காரியங்களைக் கீழே வாசியுங்கள்:**

- **1. அந்த மனிதன் எளிதிலே நெருங்கிப் பேசக்கூடிய அளவிற்குத் தாழ்மையானவனா?** இயேசு நம்மை அவரிடமிருந்து தாழ்மையைக் கற்றுக் கொள்ளுமாறு கூறினார் (மத் 11:29). ஒரு தேவபக்தியுள்ள மனிதன், இயேசுவிடமிருந்து தாழ்மையைக் கற்றுக் கொண்டவனாயிருப்பான்.
- **2. அவன் பண ஆசையிலிருந்து விடுபட்டவனும், நீங்கள் அறிந்த வரைக்கும் அவன் யாரிடத்திலும் பணத்தைக் கேட்காதவனுமாய் இருக்கிறானா?** தேவபக்தியுள்ள மனிதன், இயேசுவைப் பின்பற்றுகிறவனாயிருந்து, தம்முடைய ஊழியத்திற்காகக்கூட யாரிடத்திலும் கையேந்தாத இயேசுவைப் போலவே இருப்பான். தேவனை நேசிக்கிறவன் பணத்தை நேசிக்க மாட்டானென்றும், தேவனைப் பற்றிக்கொண்டவன் பணத்தை அசட்டை செய்வானென்றும் இயேசு சொன்னார் (லூக் 16:13).
- **3. உங்களுக்குத் தெரிந்த வரைக்கும் அவன் சுத்தமுள்ளவனாய் இருக்கிறானா?** விசேஷமாய் பெண்களின் விஷயத்திலே சுத்தவான்தானா? ஒரு தேவபக்தியுள்ள மனுஷன் பாலிய இச்சைகள் சம்பந்தப்பட்ட சோதனையைத் தவிர்க்கிறவனாக மாத்திரம் இருக்க மாட்டான்; மாறாக அதிலிருந்து விலகி ஓடுகிறவனாய் இருப்பான் (2தீமோ 2:20-22).
- **4. அவன் திருமணமாகி, பிள்ளைகளை உடையவனாயிருந்தால், பிள்ளைகளை தேவபக்தியில் வளர்த்திருக்கிறானா?** திருமணமான தேவபக்தியுள்ள மனிதன் தன்னுடைய பிள்ளைகளை தேவபக்தியிலும், ஒழுக்கத்திலும் வளர்த்திருந்திருப்பான் (1தீமோ 3:4,5; தீத்து 1:6).
- **5. அவனுடைய உடன் ஊழியர்கள் அவனோடு நெருங்கிப் பழகியதின் விளைவாக, தேவபக்தி அடைந்திருக்கிறார்களா?** தேவபக்தியுள்ளவர்களாய் இருப்பவர்கள், வேறு தேவபக்தியுள்ளவர்களை உற்பத்தி செய்வார்கள். தன்னுடைய ஆவிக்குரிய தகப்பனாகிய பவுலுடன் இருந்த தீமோத்தேயு, பவுலைப் போலவே தேவபக்தியுள்ளவனாய் மாறினான் (பிலி 2:19-22).
- **6. தானே புதிய உடன்படிக்கை சபையைக் கட்டினவனாகவோ அல்லது அப்படிப்பட்ட சபைகளைக் கட்டுகிறவர்களோடு சேர்ந்து மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுகிறவனாகவோ இருக்கிறானா?** இயேசு அவரது சபையைக் கட்டுவதற்காகவே இப்பூமிக்கு வந்தார் (மத்16:18). சபையைக் கட்டுவதற்காகவே, அவர் தம்மை மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்தார் (எபே 5:25). தேவபக்தி உடையவன் ஜனங்களைத் தேவனிடத்திற்குக் கொண்டுவருவதோடு நிறுத்திவிடாமல், அவர்களை ஒரு ஸ்தல சபையாகக் கட்டுகிறவனாகவும் இருப்பான்.
- **7. அவன் உங்களை தன்பக்கமாக இழுத்துக் கொள்ளாமல், கிறிஸ்துவோடு இணைக்கிறானா?** ஒரு தேவபக்தியுள்ள மனிதன், உங்களை கிறிஸ்துவோடு இணைப்பான். அதன்மூலமாக, நீங்களும் தேவபக்தியுள்ளவர்களாகி, மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வீர்கள் (எபே 4:15; 2கொரி 4:5)

நம்மால் பெரும்பான்மையான கிறிஸ்தவ தலைவர்களைப் பின்பற்ற முடியாது; ஏனெனில் அவர்கள் மேற்கண்ட ஏதாவது ஒரு விஷயத்திலோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட விஷயங்களிலோ தவறினவர்களாகவே உள்ளனர்.

ஒருவேளை நீங்கள் மேலுள்ள அனைத்துக் குணாதிசயங்களும் உடைய ஒரு தலைவரைக் காண்பீர்களானால், அவரை உங்கள் ஆவிக்குரிய தகப்பனாக ஏற்றுக் கொண்டு, அவரைப் பின்பற்றுவது உங்களுக்கு நலமாக இருக்கும். ஏனெனில் கர்த்தரோடு நெருங்கி வாழ அவர் உதவி செய்வதினால், நாம் பாவத்திலிருந்தும் கள்ளப் போதகத்திலிருந்தும் இவ்விதமாய் தப்புவிக்கப்படுவோம்.

காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன்.

**Source: https://tamil.cfcindia.com**

**தேவனுடைய வார்த்தையை தியானிப்பது கடினமான எல்லா தருணங்களிலும் அமைதியையும் பலத்தையும் தரக்கூடியதாக இருக்கிறது என வேதாகமம் கூறுகிறது. - டேவிட் ஜெரேமியா**

**📕 வேதவாசிப்புச் சவால்கள் – 01 ஜூன் 2025 முதல்📕**

*"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்." - சங்கீதம் 119:18*

அனைத்து கிறிஸ்தவர்களும் வேதாகமத்தை அனுதினமும் வாசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். ஆயினும், சுமார் 10 முதல் 15 சதவீதம் கிறிஸ்தவர்களே பரிசுத்த வேதாகமத்தை முறையாக தினமும் வாசிக்கிறார்கள் என சில புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சில கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தில் அல்லது செய்வதற்கு வேறு வேலை எதுவும் இல்லாத சமயத்தில் வேதத்தை வாசிக்கின்றனர். மூன்றில் ஒரு பங்கு கிறிஸ்தவர்கள் வருடத்தில் ஒருமுறை கூட வேதாகமத்தை கையில் எடுத்து வாசிப்பதில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயம் ஆகும். சில அர்ப்பணம் நிறைந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய மிகுந்த வேலைப்பளு மற்றும் அலுவல்களின் மத்தியிலும் பரிசுத்த வேதாகமத்தை ஒரு வருடத்தில் ஒரு முறையாவது முழுமையாக வாசித்து முடிக்க நேரம் ஒதுக்கி, வேதத்தை வாசிக்கின்றனர்.

உங்களுடைய வேத வாசிப்பைக் குறித்து என்ன சொல்வீர்கள்? உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 ஜூன் 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.




**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

🫡 "இந்த வேத வாசிப்பு சவால் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதன் மூலம், நான் தினமும் வேதாகமத்தை வாசிக்கிறேன், அது நான் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர எனக்கு உதவுகிறது." - R Rani

🫡 "GODependence வேதாகம வாசிப்பு சவால் எனக்கு உற்சாகமானதும் ஈடுபாடுடன் கூடியதுமாக உள்ளது. இது போன்ற மேலும் சவால்களில் பங்கேற்க நான் ஆர்வமாக உள்ளேன், ஏனெனில் இவை வேதாகமத்தைப் பற்றிய எனது புரிதலையும், அதனுடன் எனது தொடர்பையும் அதிகரிக்கின்றன." - Celeste

🫡 "வழக்கமான மற்றும் கட்டமைக்கப்பட்ட வேத வாசிப்பு சவால் ஒன்றைக் கொண்டிருப்பது நிச்சயமாகவே ஒரு நல்ல முயற்சியாகும்." - Giftsy Prathiba D

இதன் சிறப்பு அம்சங்கள்:

✴ வேதவாசிப்புச் சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✴ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✴ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✴ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✴ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✴ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

CLICK HERE **https://wa.me/96565962559**

_ **GODependence குழு**

**** 👆 இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!


**தேவனுடைய மனதில் என்ன இருக்கிறது என்பதும், மனிதனுடைய உண்மையான நிலை என்ன என்பதும், இரட்சிப்பிற்கான வழியும், பாவிகளுக்கான தண்டனை மற்றும் விசுவாசிகளின் மகிழ்ச்சி ஆகியவை பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் உண்டு.**
**- F.J. டேக்ஸ்**

வேதப்பகுதி: 1 கொரிந்தியர்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 7

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கொண்டு I கொரிந்தியரில் வரும் வசனங்களை கண்டுபிடி**




CLICK HERE https://forms.gle/nJQhGWVavFar6dqX6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 31/05/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

JOIN NOW!

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேத வாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

CLICK HERE




### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்
அற்புதராஜ் சாமுவேல்
ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
ஏ. ஆர். பீட்டர்
டெ. டென்சிங்
டார்வின் நேசகுமார் அ
ஷோபா தானியேல்
ஜோசஃபீன் ஷைனி பால்
கேதரின் சுஜி

### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.


- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1K 250 சந்தாதாரர்களையும்ன் வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது.

- இம்மானுவேல் கான்ட்

# உங்களுக்குத் தெரியுமா?



உங்களுக்குத் தெரியுமா?

## காலத்திற்கு ஒரு ஆரம்பம் உண்டா?

'காலம்' என்றால் என்ன? காலத்திற்கு ஒரு ஆரம்பம் உண்டா? புகழ்பெற்ற கணிதவியலாளர் சர் ஐசக் நியூட்டன் உட்பட பல விஞ்ஞானிகளும் அறிஞர்களும் காலம் எப்போதும் இருப்பதாகவும் அதற்கு ஆரம்பம் இல்லை என்றும் நம்பினர்.

காலம் என்பது இந்தபிரபஞ்சத்தின் நிகழ்வுகளின் தொடர்ச்சியான வரிசையாகும். இது கடந்த காலத்திலிருந்து நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் திரும்பமுடியாத முன்னேற்றத்தில் வெளிப்படுகிறது. காலம் இருப்பதற்கு, இந்த பிரபஞ்சம் இருக்க வேண்டும். பிரபஞ்சத்திற்கு ஒரு ஆரம்பம் இருப்பதை நாம் அறிந்திருப்பதால், காலத்திற்கும் ஒரு ஆரம்பம் இருக்கும்

**பரிசுத்த வேதாகமம் இந்த உண்மையை 2000 ஆண்டுகளுக்கு முன்பே வெளிப்படுத்தியது. "ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படி..." (2 தீமோத்தேயு 1:9).**

பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட இந்த அறிவு அது எழுதப்பட்ட நேரத்தில் இருந்த மனித அறிவையும் விஞ்சியது.

**பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் இன்னும் வாசிக்கவில்லை என்றால், இன்று ஏன் அதை ஆரம்பிக்கக் கூடாது?**



இடது கை நியாயாதிபதி ஒருவர் இஸ்ரவேலைக் காப்பாற்றினார்! இடது கை பழக்கமுடைய எகூத் ஒரு மறைக்கப்பட்ட குத்துவாளால் அரசன் எக்லோனைக் கொன்றார் (நியாயாதிபதிகள் 3:15-21).

**உங்களுக்குத் தெரியுமா?**

பவுல் புதிய ஏற்பாட்டின் 13 நூல்களை எழுதினார்!



## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 6 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 6 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

**வேதப்பகுதி: ரோமர்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 6

**சரியான பதில்கள்**

⬇ மேலிருந்து கீழ்
1. தேவதயவு (2:4)
5. கற்பனை (7:9)
7. கிறிஸ்து (8:34)
8. விசுவாசம் (10:17)

➡ இடமிருந்து வலம்
2. கனம் (12:10)
4. தேவகுமாரன் (1:5)
6. காயு (16:23)
14. மரணம் (8:6)
15. கெங்கிரேயா (16:1)
16. யாக்கோபு (9:12,13)
17. அன்பு (12:9)

⬅ வலமிருந்து இடம்
3. ஏழாயிரம் (11:4)
5. கடன் (4:4)
9. இருதயம் (1:21)
10. நன்மை (13:3)
18. எப்பனெத் (16:5)

⬆ கீழிருந்து மேல்
11. சரீரம் (12:5)
12. பொறுமை (15:4)
13. யாசோன் (16:21)
14. மரித்தவன் (6:7)
19. பாவம் (6:23)

**சரியான பதில்களை அனுப்பிய முதல் 10 நபர்கள்:**

1. மணிமாலா.ச
2. எஸ்.கணிச்சுவை
3. ஆர்.அமுதசெல்வி ஜூலியன்ஸ்
4. கிறிஸ்டி ஜோசப்
5. ஷகிலா மில்ச்சா
6. சாந்தி டி
7. லிடியா ஷலோமி. ஜெ
8. ஜான்சி கோபிநாத்
9. விமலாவில்சன்
10. பி பேர்ல்சன் சாமுவேல்

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 6

**கட்டங்களில் ஒளிந்திருக்கும் ரோமர் அதிகாரத்தில் உள்ள முக்கியமான வார்த்தைகளை கண்டுபிடி -விடைகள்**

நீதிமான் (3 :10)
வாக்குத்தத்தம் (4:16)
பாவம் (6:12)
நித்திய ஜீவன் (6:23)
மரணம் (8:6)
விசுவாசம் (10:17)
கிருபை (11:29)
அன்பு (13:9)
யூதன்(2:29)
எலியா (11:2)

**சரியான பதில்களை அனுப்பிய 10 நபர்களின் பெயர்கள் :**

1. அ. ஜெய்ஸ் செல்லத்துரை
2. ராணி
3. பபேயல் எலிசபெத்
4. உ.மிராக்கிளின் ஜெஸி
5. சாம்
6. ஏ. ஞானபாய் கிளாடிஸ்
7. ஸ்டெஃபிசார்லஸ்
8. ஜீவிதா
9. ஆர்.அமுதசெல்வி ஜூலியன்ஸ்
10. அபிராமி ரவிச்சந்திரன்

**என் வேதாகமத்திலிருந்து என்னைத் தடுக்கும் அனைத்துமே என் எதிரி ஆகும், அது எவ்வளவு தீங்கற்றதாகத் தோன்றினாலும் கூட.**

**- ஏ.டபிள்யூ. டோசர்**

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

30 ஏப்ரல் 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 30 April 2025

### 1 Month Bible Reading Challenge

1. Hepzibah Robert
2. M Samuel
3. Sherine Ranjit
4. Vanitha
5. Mary Anitha K
6. Padmavathi R
7. Philip C
8. Shoba Daniel

Congratulations!

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 30 April 2025

### 2 Months Bible Reading Challenge

1. Josephine Jeya Amos
2. J. Beula Padmavathy
3. Jershajustin J. L
4. R Rani
5. R. Amuthaselvi Juliance
6. S. Jebabai Padmini
7. Sudhan B

Congratulations!

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 30 April 2025

### 3 Months Bible Reading Challenge

1. Hebsi Willingston
2. Joyce. N
3. Gnana Jeba Immanuel
4. P. Augusta

Congratulations!

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 30 April 2025

### 4 Months Bible Reading Challenge

- Celeste
- D Esther Annal
- GIFTSY PRATHIBA D
- Kezia John Paul
- Pauline M
- A. Jemima
- A. Abibrisckilla
- A.Hepsie Melba
- C Sudha
- G.Jeya Sutha Perciya
- Jansi Rani G
- Kamala Gnanaraj
- P.G.MARTINMURUGAN
- R C VIMAL CHANDER
- R. Kiruba Jansi Mary
- RANJITHAM DEVAKUMARI.
- T. Christina Selvarani .
- T. Prema
- Jemima
- Helen Sampson

Congratulations!

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 30 April 2025

### 6 Months Bible Reading Challenge

- Dasari Prasanthi
- Indra jones
- Vijaya Rani Samuel
- ANITA BEULAH SUGANTHI D
- Asha Joseph
- C. Jeyapackiam
- Gnanamani Samuel
- P. Devamani Rajam
- R. Durga Ori
- S. Sumathi
- S.Ramya Kirubaharan
- Suganthi. N
- T. Premala Kumari
- T. Premala Kumari.
- Y. CHELLADURAI
- Vijayarani Samuel

Congratulations!

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 30 April 2025

### 1 Year Bible Reading Challenge

1. Gladys Thomas
2. Vijaya Rani Samuel
3. Elizabeth Raj
4. G. Annie Grace Caroline
5. Gifta Arumainayagam
6. Jane Hepzibah
7. P. Devakani
8. S . Angeline Vasantha Kumari
9. Williams Venkatesh
10. Banupriya. M

Congratulations!

நீங்கள் எந்தளவு அதிகமாக தினசரி செய்திகளை வாசிக்கிறீர்களோ அதைவிட அதிகமாக பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டும். பரிசுத்த வேதாகமம் செய்திகளை விளக்குகிறது. வேதமில்லையேல் செய்திகள் நம்மை விரக்தியடையச் செய்யும். - Charlie Dates

# எப்பாப்பிரோதீத்து

## பவுலுக்கு உதவ தன் உயிரைப் பணயம் வைத்த மனிதன்

**(பிலிப்பியர் 2:25-30; 4:18)**

அப்போஸ்தலன் பவுல் ரோமில் சிறையில் அடைக்கப்பட்டபோது, பிலிப்பியிலிருந்த விசுவாசிகள் அவருக்கு பண உதவி செய்ய விரும்பினர். பணத்தை ரோமுக்கு எடுத்துச் செல்லும்படி எப்பாப்பிரோதீத்துவிடம் அவர்கள் ஒப்படைத்தனர்.

அந்த உபகாரத்தைக் கொண்டு வர எப்பாப்பிரோதீத்து பல கஷ்டங்களைச் சகித்தார். பிலிப்பியிலிருந்து ரோமுக்கு 1300 கி.மீ சவாலான பயணத்தை அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவர் ஆபத்தான நிலப்பரப்புகள் மற்றும் ஆதிரியா கடல் வழியாக செல்ல வேண்டியிருந்தது. அந்த நாட்களில், காகித நாணயம் இல்லை. எனவே அவர் சுமந்து வந்த பணம் அதிகமாக இருந்திருக்கக்கூடும். கொள்ளையர்கள் அவரைத் தாக்கும் வாய்ப்புகள் இருந்தன. இருப்பினும், அவர் இறுதியாக பவுலை அடைந்து, பணத்தை ஒப்படைத்து அவருக்கு சேவை செய்தார்.

இந்தப் பணியின் போது, எப்பாப்பிரோதீத்து நோய்வாய்ப்பட்டு, கிட்டத்தட்ட இறந்து போனார். அவர் குணமடைந்ததும் பவுல் அவரை பிலிப்பிக்குத் திருப்பி அனுப்பினார்.


**எப்பாப்பிரோதீத்துவிடமிருந்து நாம் பின்பற்றக்கூடிய உதாரணங்கள் என்ன?**

- பவுலுக்கு உதவ எப்பாப்பிரோதீத்து கஷ்டங்களைத் தாங்கத் தயாராக இருந்தார். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக நாம் உழைக்கத் தயாரா?
- அவருடைய ஊழியம் திரைக்குப் பின்னால் இருந்தது. மற்றவர்கள் கவனிக்காத ஒரு ஊழியத்தைச் செய்ய நாம் தயாரா?
- பிலிப்பியர்கள் தான் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டதால் அவர் வருத்தப்பட்டார். தன்னை ரோமுக்கு அனுப்பியதற்கு அவர்கள் வருத்தப்படுவார்கள் என்று அவர் நினைத்தார். மற்றவர்களிடமிருந்து அனுதாபத்தையும் கவனத்தையும் பெறுவதற்காக நம் நோய்களை விரிவாக விவரிக்கிறோமா? அல்லது நோயிலும் கூட நாம் அனுபவிக்கும் தேவனின் நன்மையை அறிவிக்கிறோமா?
- கர்த்தருக்கு முழு மனதுடன் சேவை செய்யும்போது கூட, நாம் நோய்வாய்ப்படும்போது தேவனிடம் புகார் செய்கிறோமா? எல்லாவற்றிலும் நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.
- பவுல் எப்பாப்பிரோதீத்துவை தனது சகோதரர், சக வேலையாள் மற்றும் சக போர்வீரன் என்று விவரிக்கிறார். இந்தப் பட்டப்பெயர்கள் நமக்குப் பொருந்துமா?

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 7



**➡ இடமிருந்து வலம்**

1. பவுல் யாரை தன்னுடைய குமாரன் என்றார்? (5)

7. ஞானத்தை தேடுகிறவர்கள். (5)

**⬇ மேலிருந்து கீழ்**

1. தேவனானவர் சபையில் இரண்டாவதாக யாரை ஏற்படுத்தினார்? (9)

2. கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு அளிக்கப்பட்டது. (5)

3. எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறவன். (8)

4. அடையாளத்தை கேட்கிறவர்கள். (5)

5. போடப்பட்டிருக்கிற _____ இயேசு கிறிஸ்து. (6)

6. அவயவங்கள் அநேகமாயிருந்தும் ____ ஒன்றே. (4)

**வேதப்பகுதி: 1 கொரிந்தியர்**

**⬆ கீழிருந்து மேல்**

8. யார்நிமித்தம் ஸ்திரீ முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்? (5)

12. இவ்வுலகத்தின் ____ கடந்துபோகிறதே. (3)

14. தேவனுடையவர் (4)

15. முந்தின மனுஷன் (3)

**⬅ வலமிருந்து இடம்**

9. எது இல்லாமல் சுவிசேஷத்தை பிரசங்கிக்க கிறிஸ்து பவுலை அனுப்பினார்? (7)

10. மரணத்தின் கூர். (3)

11. நிலைத்திருக்கிற மூன்றில் பெரியது. (3)

13. கொரிந்தியருக்குள் வாக்குவாதங்கள் உண்டென்று பவுலுக்கு அறிவித்த வீட்டார். (5)

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

CLICK HERE https://forms.gle/46ecdNrAWdjJuy7c6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 31/05/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**வேதாகமத்தில் இருக்கிற ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய வழிநடத்துதலின்படியே எழுதப்பட்டிருக்கிறது என்பதை வேதாகமத்தை வாசிக்கிறவர்களாகிய நாம் மனதில் கொள்ள வேண்டும். - மார்க் S. டெய்லர்**

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges


## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

தேவன் மனிதர்கள் மீது அருளின மிகப்பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்று பரிசுத்த வேதாகமம் ஆகும். தேவனே அதன் ஆசிரியர், இரட்சிப்பே அதன் நோக்கம், மற்றும் அதன் உள்ளடக்கத்தில் எவ்வித கலப்பும் இல்லாத சத்தியத்தை உடையதாக இருக்கிறது. அது முற்றிலும் சுத்தமானதாக இருக்கிறது. - ஜான் லாக்




- உங்கள் ஆதரவால் இதை வாசித்து முடிக்கும் இந்த வாய்ப்புக்காக தேவனை துதிக்கிறேன்.
- இது என் ஆவிக்குரிய வாழ்க்கையின் கண்களைத் திறந்தது.
- கொஞ்சம் கடினம். ஆனால் இது புதிய அனுபவம்.
- அருமையான அனுபவம். வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இருந்தது.
- பைபிள் வசனங்கள் வாசிக்க வேண்டும் என்று ஆர்வம் அதிகரித்து இருக்கிறது.
- மிகவும் பயனுள்ளதாக இருந்தது. வேதாகமத்தோடு அதிக நெருக்கம் ஏற்பட்டது.
- தேவனோடு செலவிட நிறைய நேரமும் வேதத்தின் ரகசியத்தை தெரிந்து கொள்ள உதவியாகவும் இருந்தது.
- ரொம்ப பிரயோஜனமாக உள்ளது. வேதத்தை கால வரிசைப்படி வாசிக்க தேவன் உதவி செய்திருக்கிறார்.
- எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இது மிகவும் பிரயோஜனமாக இருந்தது.
- வேதத்தில் இருந்து நான் பலவற்றைக் கற்றுக்கொண்டேன், இந்த வாய்ப்புக்கு மிக்க நன்றி. எல்லா மகிமையும் தேவனுக்கே.
- வேதம் வாசிக்கக் கூடிய ஆர்வத்தையும் தேவனுக்கும் எனக்கும் உள்ள உறவையும் அதிகரித்துள்ளது.
- வேதாகமத்தை கால வரிசைப்படி புரிந்து கொள்ள இது எனக்கு உதவியது.
- என்னாலும் வாசித்து முடிக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை வந்தது.
- வேறு எதையும் சிந்திக்காமல் வேத வாசிப்பிலே ஒவ்வொரு நாளும் கழிந்தது சிறந்த அனுபவமாக இருந்தது.
- எனக்கு ஆவிக்குரிய காரியத்திற்கு பிரயோஜனமாக இருந்தது. நான் தேவனோடு நெருக்கமாக இருப்பதாக உணர்ந்தேன்.
- முழு வேதத்தையும் குறித்த நாட்களில் வாசித்து முடிக்க, எமக்கு வழிகாட்டிய தங்களுக்கும், தடையின்றி என்னை வழி நடத்திய தேவனுக்கும் எமது நன்றி. இந்த மேன்மையான அனுபவம், எம்மை உலகினை மறந்து உன்னத தேவனோடு ஒருங்கிணைந்து நடக்கச் செய்த ஒப்பற்ற அனுபவம். இந்த அனுபவம் ஆவிக்குரிய பெரும் தாக்கத்தை, அதாவது வேதத்தின் மீது தீராத தாகத்தையும், வாஞ்சையையும் என்னில் உண்டாக்கியிருப்பது, எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்! இத்தகு விருப்பத்தையும், செய்கையையும் உண்டாக்கிய தேவனுக்கும், தங்களுக்கும் எமது நன்றி.
- வேதவாசிப்பு பகுதிகள் மாறி மாறி கொடுத்ததால் வாசிக்க கொஞ்சம் தாமதமாகிவிட்டது.
- ஆசீர்வாதமான அனுபவம். தேவன் நம்மை லெந்து காலத்தில் முழு வேதத்தையும் வாசித்து முடிக்க நமக்கு வழிகாட்டியுள்ளார். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நன்றி, சகோதர சகோதரிகளே.
- இந்த வாசிப்பு முறையை நான் யோசித்து தோல்வி அடைந்தேன். ஆனால் உங்களுடைய இந்த வரிசைக்கிரமம் என்னை ஆசையாக படிக்க வைத்தது.
- தேவனுக்கு நிறைய நேரம் கொடுக்கவும் வேதத்தின் ரகசியங்களை தெரிந்து கொள்ளவும் உதவியாக இருந்தது.
- மீண்டும் மீண்டும் வாசிப்பதில் ஒரு நல்ல அனுபவம், ஏனென்றால் ஒவ்வொரு முறையும் வாசிக்கும் போது ஒரு புதிய அர்த்தமும், கருத்தும் தெளிவாகிறது.
- இது எனக்கு புதிதாக இருந்தது, ஆனால் இந்த லெந்து நாட்களில் இந்த சவாலை வெற்றிகரமான முடித்துவிட்டேன்.
- எனக்கு இது மிகவும் அதிசயமாக இருந்தது... ஏனென்றால் பல வருடங்களாக வேதத்தை முழுவதும் வாசிக்க திட்டமிட்டிருந்தேன்... ஆனால் ஒருபோதும் அதை செயல்படுத்த முடியவில்லை... ஆனால் இந்த முறை செய்து முடித்தேன்... உங்கள் குழுவிற்கு மிக்க நன்றி... எல்லா மகிமையும் தேவனுக்கே...
- மோசேக்கு கிடைத்த ஒரேப் பர்வத அனுபவம், இந்த வேத வாசிப்பில் கிடைத்தது. தேவனுக்கே மகிமை.
- இது மிகவும் சவாலானதும் ஊக்கமளிப்பதுமான அனுபவமாக இருந்தது.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

**உங்கள் வாழ்க்கையே மாற்றும் ஒரு புத்தகம் என்றால் அது வேதாகமம்** — CLICK HERE **SIS.AMUTHA**

**தடைகள் எல்லாம் தகர்த்து, வேதாகமம் வாசிக்க தேவன் கிருபை செய்தார்** — CLICK HERE **SIS.GNANA JEYA**



**தேவனுடைய வார்த்தையில் இயற்கைக்கப்பாற்பட்ட அற்புத வல்லமை இருக்கிறது. அது அவரிடம் வெறுமையாக திரும்புவதில்லை. - பெயர் அறியப்படாதவர்**

# 1 கொரிந்தியர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 56
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 56

**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- அப்போஸ்தனாகிய பவுல் எழுதிய பெரிய கடிதங்களில் ஒன்றான இக்கடிதம் இன்றைய சூழலுக்கு மிகவும் பொருத்தமுடைய அறிவுரைகளை வழங்குகிறது. அன்பு பற்றிய சிறந்த ஒரு கவிதை இக்கடிதத்தில் உள்ளது.

## சூழலும் நோக்கமும்

- கொரிந்து திருச்சபையினர் பெருமையினால் நிறைந்தும், பாலியல் ஒழுக்கக்கேட்டை மன்னித்தும் வந்தனர். ஆவிக்குரிய வரன்கள் முறையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டன. மேலும் முக்கிய கிறிஸ்தவ கோட்பாடுகளின் தவறான புரிதலும் அவர்களுக்கு இருந்தது. பவுல் கொரிந்தியருக்கு தனது முதல் கடிதத்தை எழுதியதின் மூலம் கொரிந்திய திருச்சபையை அதன் அடித்தளமாகிய இயேசு கிறிஸ்துவில் மீட்டெடுக்க முயற்சித்தார். பவுல் காலத்தில் கொரிந்து ஒரு பெரிய வணிக நகரமாக விளங்கியது. ரோமையரின் குடியேற்ற நகரமாகவும் திகழ்ந்தது. இங்குப் பல தெய்வங்களுக்கான கோவில்கள் இருந்தன. வழிபாடு சார்ந்த வாணிகமும் தழைத்தோங்கியது. 'கொரிந்தியரைப் போல் இருத்தல்' என்னும் கூற்று ஒழுக்கக்கேடாய் வாழ்தலைக் குறித்தது. பவுல் காலத்தில் இந்நகரில் ஏறக்குறைய 700,000 மக்கள் வாழ்ந்தனர். அவர்களில் மூன்றில் இரு பங்கினர் அடிமை மக்கள். பவுல் தம் இரண்டாம் நற்செய்திப் பயணத்தின்போது இங்குத் திருச்சபையை ஏற்படுத்தினார் (1 கொரி 3:6,10, அப் 18:1-7), ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியருடன் நட்பு கொண்டார். யூதர்களுடன் ஜெப ஆலயத்தில் விவாதித்தார். பின்னர் பவுல் எபேசு நகரத்தில் நற்செய்திப்பணி ஆற்றியபோது குலோவேயாள் வீட்டினர் மூலம் கொரிந்துத் திருச்சபையில் இருந்த பிளவுகள் பற்றிக் கேள்விப்பட்டார் (1 கொரி 1:11) மற்றும்ம் கொரிந்தில் காணப்பட்ட சில சிக்கல்களுக்கு விடைகேட்டு கொரிந்திய திருச்சபை பவுலுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தது (1 கொரி 7:1). இக்கடிதம் வழியாகவும் கடிதத்தைக் கொண்டு வந்த மூவர் வாய்மொழி வழியாகவும் (1 கொரி 16:17) அறிந்துகொண்ட சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முறையில் பவுல்கடிதத்தை எழுதியுள்ளார்.

## முக்கிய வசனங்கள்

1 கொரி 3:3, 1 கொரி 6:19-20, 1 கொரி 10:31, 1 கொரி 12:7, 1 கொரி 13:4-7, 1 கொரி 15: 3-4

## புத்தகத்தின் சுருக்கம்

- கொரிந்திய திருச்சபைப் பிளவுகளால் பாதிக்கப்பட்டு அங்குள்ள விசுவாசிகள் சில ஆவிக்குரியத் தலைவர்களுகேற்ற குழுக்களாகப் பிரிந்தனர் (1 கொரி 1:12, 3:1-6). கிறிஸ்துவின் பக்தியின் காரணமாக கொரிந்திய விசுவாசிகள் ஒன்றுபடும்படி பவுல் அறிவுறுத்தினார் (1 கொரி 3:21-23). திருச்சபையில் பலர் ஒழுக்கக்கேடான உறவை ஏற்றுக்கொண்டனர் (1 கொரி 5:1-2). அந்த மாதிரியான துன்மார்க்கரை திருச்சபையிலிருந்து வெளியேற்றும்படி பவுல் அவர்களுக்குக் கட்டளையிட்டார் (1 கொரி 5:13). விசுவாசிகள் ஒருவரையொருவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர் (1 கொரி 6:1-2). பவுல் அவர்களின் கிறிஸ்தவ சாட்சியத்தை சேதப்படுத்துவதை விட சாதகமாக்கிக் கொள்வது நல்லது என்று போதித்தார் (1 கொரி 6:3-8). திருமணம் மற்றும் பிரம்மச்சரியம் (அதி 7), விக்கிரகங்களுக்குப் பலியிடப்பட்ட உணவு (அதி 8 & 10), கிறிஸ்தவ சுதந்திரம் (அதி 9), பெண்களின் முக்காடு (1 கொரி 11:1-16), கர்த்தருடைய இராப்போஜனம் போன்றவைப் பற்றிய அறிவுறுத்தல்களை கொரிந்திய திருச்சபைக்கு பவுல் வழங்கினார் (1 கொரி 11:17-34). அதே நேரம் ஆவிக்குரிய வரங்கள் (அதி12-14) மற்றும் உயிர்த்தெழுதல் (அதி 15) போன்றவற்றைப் பற்றியும் எழுதினார். கொரிந்திய விசுவாசிகள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதன் மூலமும், முறையற்ற நடத்தை மற்றும் அவர்கள் ஏற்றுக்கொண்ட தவறான நம்பிக்கைகளுக்குப் பதிலளிப்பதன் மூலமும் பவுல் 1 கொரிந்தியர் புத்தகத்தை ஒழுங்கமைத்தார்.

## தொடர்புகள்

- இப்புத்தகத்தின் 10ம் அதிகாரத்தில் கொரிந்திய விசுவாசிகளுக்கு தங்கள் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துவதன் முட்டாள்தனத்தையும், அதீத நம்பிக்கையின் ஆபத்தையும் விளக்குவதற்காக இஸ்ரவேலர்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்த கதையைப் பவுல் பயன்படுத்துகிறார். கொரிந்தியர்களின் சுய ஒழுக்கமின்மை பற்றி பவுல் எச்சரித்தார் (1 கொரி 9:24-27). தேவனின் அற்புதங்களையும் அவர்களை அவர் கவனித்துக்கொள்வதையும் செங்கடலைப் பிரிப்பதையும், வானத்திலிருந்து மன்னாவையும் பாறையிலிருந்து தண்ணீரையும் அற்புதமாக வழங்குவதையும் பார்த்தாலும், அவர்கள் தங்கள் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து வீழ்ந்த இஸ்ரவேலர்களைப் பற்றி அவர் விவரிக்கிறார். ஒழுக்கக்கேடு, உருவ வழிபாடு, இச்சைகள் மற்றும் பாலியல் ஒழுக்கக்கேட்டைத் தவிர்க்கவும் (1 கொரி 10:6-8) கிறிஸ்துவை சோதிக்காமலிருக்கவும் (1 கொரி 10:9-10) கொரிந்திய திருச்சபையைப் பவுல் அறிவுறுத்துகிறார் (எண் 11:4, 34, 25:1-9, யாத் 16:2, 17:2-7).

## நடைமுறைப் பயன்பாடு

- கொரிந்திய திருச்சபை கையாண்ட பல பிரச்சனைகள் மற்றும் கேள்விகள் இன்றும் சபையில் உள்ளன. இன்றும் திருச்சபையில் பிளவுகள், ஒழுக்கக்கேடு மற்றும் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துவதில் பிரச்சனைகள் உள்ளன. 1 கொரிந்தியர் புத்தகம் கூறும் பவுலின் எச்சரிக்கைகளுக்கு செவிசாய்த்து அவற்றை நமக்குப் பொருத்துவது நல்லது. பவுலின் கண்டனங்கள் மற்றும் திருத்தங்கள் ஆகியவை இருந்தபோதிலும்,இப்புத்தகம் நம் கவனத்தை அது இருக்க வேண்டிய இடமாகிய கிறிஸ்துவின் மீது கொண்டுவருகிறது. உண்மையான கிறிஸ்தவ அன்பே பல பிரச்சனைகளுக்கான பதிலாகும் (அதி 13). அதி 15 ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய சரியான புரிதல் மற்றும் அதன் மூலம் நம்முடைய சொந்த உயிர்த்தெழுதலைப் பற்றிய சரியான புரிதல் இன்றைய திருச்சபைக்கு இன்றியமையாததாகும்.

## நூலின் அமைப்பு

1) முன்னுரை ( வாழ்த்தும் நன்றியும் ) 1:1 - 9
2) திருச்சபையில் பிளவுகள் 1:10 - 4:21
3) கூடா ஒழுக்கமும் குடும்ப ஒழுக்கமும் 5:1 - 7:40
4) விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணுதல் 8:1 - 11:1
5) வழிபாடு 11:2 - 14:40
   - பெண்கள் தலையை மூடிக் கொள்ளுதல்
   - ஆண்டவரின் திருவிருந்து
   - பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் வரங்கள்
6) உயிர்த்தெழுதல் 15:1 - 58
7) இறைமக்களுக்காக நன்கொடை திரட்டல் 16:1 - 4
8) முடிவுரை 16:5 - 24

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

GODDependence

தேவனுடைய வார்த்தையானது பார்க்கமுடியாதபடி இருள் சூழ்ந்த நாட்களுக்கு உதவும்படி உண்டாக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமமானது இருளினூடாக ஒரு ஒளிக்கீற்றை அனுப்புகிறது. நம்மால் செய்யவே முடியாது என்று நாம் நினைத்து பயப்படும் காலங்களில் அது நமக்கிருக்கும் பாதுகாப்பை உணர்த்துகிறது. - சார்லஸ் R. ஸ்விண்டால்

1

## ரமலான் மற்றும் லெந்துகால வேத வாசிப்பு சவால்கள் - 2025

பிப்ரவரி 28 இல் தொடங்கி 30 மார்ச் ல் முடிவடைந்த ரமலான் கால வேதவாசிப்பு சவால்களில் 21 பேர் வெற்றிகரமாக பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடித்தனர்.

மார்ச் 5-ல் ஆரம்பித்த லெந்து கால வேதவாசிப்பு சவால் குழுக்கள் ஏப்ரல் 20-ல் நிறைவடைந்தன. இவற்றில் 1250 க்கும் மேற்பட்டோர் இணைந்திருந்தனர். அவர்களில் 82 பேர் இந்த சவாலினை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இவ்விரண்டு வேதவாசிப்பு சவால்களிலும் வாசிக்க வேண்டிய வேதபகுதிகள் அவை நடந்த கால வரிசைப் படி கொடுக்கப்பட்டன.




2



## GODependence கருத்தரங்கு - மே 2025

மே மாதத்திற்கான கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட வில்லை.

வரும் மாதங்களில் இவை முறையாக ஒழுங்கு செய்யப்படும்.

3

## சிறுவர் வேதவாசிப்பு சவால்கள்

2024-25 கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால்களில் 250 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் 3 வகையான வயது பிரிவினர்களாக பங்கேற்றனர்.

வரும் கல்வியாண்டு 2025-26 க்கான அடுத்த சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் 16 ஜூன் 2025 இல் ஆரம்பிக்கும். இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் 2025 மே மாத இறுதியில் வேதவாசிப்புக் குழுக்களில் பகிரப்படும். மேலும் விபரங்களுக்கு +965 65962559 என்ற எண்ணில் வாட்சாப்பில் தொடர்பு கொள்ளலாம்.



4



## வேத தியான குழுக்கள் (BMG) - July 2025 முதல்

தவிர்க்க இயலாத காரணங்களினால், மறுபடியும் ஆரம்பிக்க வேண்டிய வேத தியான குழுக்கள் (BMG) ஜூலை 2025-ல் இருந்து தான் ஆரம்பித்து தொடர்ந்து நடத்தப்பட இருக்கின்றன. இவற்றில் கலந்து கொள்ள விரும்புகிற வர்களுக்கான பயிற்சிகள் ஜூன் 2025 ல் நடைபெறும்.

இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் வேதவாசிப்பு குழுக்களில் பகிரப்படும்.

FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

GODependence

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்.**

**- சங்கீதம் 119:160**